
விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்

அழகிய ஆரம்பம்

2025 July 16-31

கின்ஸ

ஈ இதழ்





அனைவருக்கும் வணக்கம்.
இன்று இதழ் சில தவிர்க்க இயலாத காரணத்தால் சென்ற இதழ் வெளியாகவில்லை. மன்னிக்கவும்.

இனி வழக்கம் போல் வெளியாகும். இது படைப்பாளர்களின் சொந்தவீடு போல் இதழை கொண்டு வருகிறோம்.

இதழ்களின் வருகையும், படிக்கும் பழக்கமும் குறைந்துவரும் இந்த காலத்தில் ஊக்குவிக்கும் ஒரு படியாக இன்று இதழை கொண்டு வருகிறோம்.

எழுத்தாளர்கள் வழக்கம் போல் உங்கள் ஆதரவுகளை தாருங்கள்.

உங்கள் படைப்புகள் தேர்வு செய்யப்பட்டவுடன் இன்று ஈ இதழின் வாட்சப் சேனலில் டிசைன் செய்யப் படாமல் வெளியாகும். இதழில் முழு வடிவத்துடன் பார்க்கலாம்.

கீழ்காணும் க்யு ஆர் கோட் பயன்படுத்தி சேனலில் இணையுங்கள்... நன்றி'

வெ.கோபிநாத்,
ஆசிரியர்.

இன்று / ஈ இதழ்
WhatsApp channel

கவிதை



முத்து ஆனந்த்,
வேலூர் செல் 7010482479

அள்ள அள்ளக் குறையாத
அன்பு சுரபி
என்னவளே
உன் காதல்...

அழைக்கும் போது
மட்டும் தானடி
இனிப்பு தடவிக்கொள்கிறது
என் பெயர்...

உன்னால் மட்டும்
எப்படி அன்பே
கணக்கில்லாமல்
கவிதைகளை
உன் கண்களின் பார்வைகளில்
வைத்திருக்க முடிகிறது...

என் காதல் சாம்ராஜ்ஜியத்தை
மிகவும் அழகாக ஆள்வதற்கு
நீ மட்டுமே
மிகப் பொருத்தமான
காதல் மகாராணி
என் இனியவளே...

நமக்குள்
எந்த ரகசியமும்
இல்லையென்பதை
எப்படி வியந்து பார்க்கிறது பார்
அன்பே
இந்த நம் காதல்...

லி.நௌஷாத் கான்- கவிதைகள்





கடவுளே
நிம்மதியாக வாழ வேண்டும்
அவள் பற்றிய நினைவுகளை
என்னிடமிருந்து எடுத்து விடு
மறதி சாபமல்ல
என் பார்வையில் வரம்!

கவலைகளை நேசிக்கிறேன்
ஏனெனில்
அது மட்டும் தான்
எனை அரவணைத்து கொள்கிறது!

பகலில் நிலவை
பார்க்க வேண்டும் போலிருக்கிறது
அடிக்கடி
உன் முகம் காட்டடி!

அவளை பார்த்த பிறகு
என் வாழ்வில்
பாதை என்பதே இல்லை!

-கனவுகள் பிறந்ததிலிருந்து
ஆசைகள் வளர்ந்ததிலிருந்து
தேவைகள் உயிர் வரையில்

வாழ்க்கை எப்போதோ??????????

-கனவுகளில் தொடங்கி
கல்லறையில் முடிவது தான்
வாழ்க்கை!




August 2025

Mo	Tue	We	Thu	Fri	Sat	Sun
இன்று				1	2	3
4	5	6	7	8	9	10
11	12	13	14	15	16	17
18	19	20	21	22	23	24
25	26	27	28	29	30	31

TIMES OF DAY





INDIAN ARMY
COMMANDO
நாத்திகனே நம்பும்
கடவுள்
எங்களின்
எல்லைச்சாமிகள்
செங்கமலன்


கண்ணாமூச்சி
தீவு
கோவைக்கவி
புவனா
கண்ணாமூச்சி விளையாட்டில்
கண்களைக் கட்டிக்
காதல் தீவிற்கு
வழி காட்டுகிறாய்!
அங்கே நான்
உன்னைக் கண்டுபிடித்து
என்னையல்லவா இழந்தேன்!!!!


"அந்த பேங்க் மேனஜர்
படம் எடுக்கறாராமே,
படத்துக்கு என்ன பேராம்"
"செக்(cheque) லைஃப்.
டி.என்.பாலகிருஷ்ணன்
சென்னை


அந்த பதுங்கு குழியில்
மட்டும் அப்படி என்ன
சிறப்பு மன்னா?"
"ராசியான பதுங்கு குழி
அமைச்சரே...
ஒரு தடவை உள்ளே
புகுந்து விட்டால்,
வெளியே வர
மனசே இருக்காது!"
ப.சோமசுந்தரம்
கோவிலம்பாக்கம்
சென்னை 600129
போன்:8778414755


"இந்த ஹோட்டல்
முதலாளிக்கு தமிழ்நாட்டு
பற்று அதிகம்!"
"அதுக்காக
மைசூர் போண்டா
பெயரை
மயிலாப்பூர் போண்டா'ன்னு
மெனு கார்டுல
எழுதி வச்சிருக்கறது
நல்லாவா இருக்கு!?
கயத்தை சத்யா

என் இதயம்

தொலைந்த-
இடம் தெரிந்தும்
தேட மனமில்லை
முதல் முத்தத்தோடும்
முதல் காதலோடும்
அது
உனக்குள்ளே இருக்கட்டும்!

கவிஞன்

கவிதைகளும்
எங்களுக்கு
கருவறைதான்
கற்பனைகளை
மனதில் சுமப்பதினால்...



பாரதி முத்து
ஓட்டேரி வேலூர்

 2 PIN SOCKET	 2 PIN TOP	 3 PIN TOP
 MULTIPIN PLUG SOCKET	 5 PIN SOCKET	 MALE FEMALE PLUG
 1 WAY SWITCH	 2 WAY SWITCH	 BELL SWITCH
 BED SWITCH	 FAN REGULATOR	 FUSE

கவிதை துளி.

ஆகாரம் தந்து கொண்டிருந்த
விவசாய நிலம்
அழிக்கப்பட்டு கட்டப்பட்டது
ஆரோக்கியம் தர போகும் மருத்துவமனை.

ஏ ஜி முகம்மது தௌபீக்
மேலப்பாளையம்.
✆ 8825768085.







காதல் குரல்கள்

காதல் மறப்பது நன்றன்று நன்றல்லது
பிரேக்அப் மறப்பது நன்று

யாகாவாராயினும் காதல் காக்க காவாக்கால்
கைநழுவிச் சென்று விடும்

ஆண் பெண் காதலெல்லாம் முகநூல்
புலனம் முதற்றே உலகு

காதல் செய்தாரை ஒருத்தர் அவர்நாண
கல்யாணம் செய்து விடல்

இனிய உளவாக இன்னாத கூறல்
காதலிருப்பக் கனவு கவர்ந்தற்று

முத்து ஆனந்த் வேலூர்

ஆடுகளம்

சசிகலா
விஸ்வநாதன்



ஆடுகளம் காணும் முன்
மனக் களத்தில் ஆடிப் பழகு!

நுணுக்கம் பயல்வதில்
பயனில்லை.
பார்த்து எதையும் கற்க இயலாது.

பயிற்சி எடுக்கலாம்தான்
ஒத்திகை செய்யலாம் தான்.
வித்தகம் பயிலலாம்தான்.

ஒத்திசைவு அமைவது
அவன் ஒருத்தன் விருப்பம்
மட்டும்.

வித்தகத்தில் கரைந்து கர்மத்தில்
ஒருமிக்க;

புது நுணுக்கம் ஒன்றை
இறையருள் காட்டும்
அன்று! அப்போது!

அக்கணத்திற்கு
காத்திருந்து ஏங்கி
வித்தைகள் காட்டுபவனே

கர்மத்திற்கு அடிபணிந்த வீரன்;
அவன்,
சூரனாகிறான் அப்போது.



கவிதை

தூரில் இருளிருக்கும் சுடர்!

பெண்ணுக்குள் எத்தனையோ
பெருந்துயரம் சூழ்ந்திருக்கும்
கண்ணுக்கு பூப்போலக்
கனிந்திருப்பாள் ---மண்ணுக்குள்
வேராய்

குடந்தை
பரிபூரணன்
செல் 63845 38289





மினி கதை

விதிமுறை

மலர்மதி
செல் 8667417874

பிரதான சாலையில்
தலைக்கவசம் அணியாமல்
சென்ற இருசக்கர வாகன
ஓட்டிகளை மடக்கி, அபராதம்
போட்ட போக்குவரத்து
காவலர் புகழேந்தி, பணி
முடிந்ததும் தன் இருசக்கர
வாகனத்தில் வீடு திரும்பினார்,
தலைக்கவசம் அணியாமலே!

யாரிடமும் பேசிடா மௌனம்..



சசிகலா திருமால்

நீயில்லா நொடிகளனைத்தும்
மொட்டவிழ்த்த மலரின் அழகோ
மழலையின் மெல்லிய புன்னகையோ
இரசனையின் எட்டா பிடிக்குள்
சிக்கியே மரணிக்கின்றது...

யாரிடமும் பேசிடா நின் மௌனம் கூட
என்னோடு முட்டி மோதுகிறது..
உந்தன் நினைவொன்றையே
ஆடையெனச் சுற்றிக் கொள்ளும்
மனம் ஏனோ வெட்கம் மறக்கிறது...

காற்றோடு கரையும் வாசமதில்
நின் வாசமும் கலந்தே வருகிறது...
நின் வாசமதை சுவாசமென ஏற்று
சப்தநாடிகளும் சப்திக்குமாறு
உயிரின் ஆழம்வரை
இழுத்துக் கொள்கிறேன்..

தன்னிலை மறந்திட்ட என்நிலைக் கண்டு
பரிகசித்து சிரிக்கிறது இந்த காதல்..
காதலில் வீழ்ந்தப்பின்
யாவரின் நிலையும் இதுதானே..
பின் ஏன் என்னை மட்டும்
எள்ளி நகையாடுகிறது
இந்த பொல்லாத காதல்...



பணம்



திருச்சிற்றம்பலம்
சுரேஷ்
செல் 9092142678

வேலைக்கு போக..
துளியும்
விருப்பம் இல்லை
இருப்பினும்
கட்டாயத்தில்...
பணிக்கு சென்றான்...

மனைவி..பிள்ளைக்கு
மாதம்...மாதம்
ஜீவனாம்சமாக தந்திட

பெரும் சேமிப்பு...



சு.மூன் சுதாகரன்
வானவன்மகாதேவி.
✆ 97875098207

சேமித்த வார்த்தைகளெல்லாம்
எங்கே தொலைந்து போனதோ!?

பெரும் பிரியத்தின் முன்னால்
பேச்சற்றுப் போவது
நிகழ்கையில் தான் புரிகிறது...

இனியாவது
பிரியம் நிறைந்த சந்திப்பு
சேமிக்கப் போகும்
பெரும் வரமாகட்டும்!

புதுக்கவிதை



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி
செல். 9944284135

1. தாஜ்மஹால்

தாஜ்மஹால் பளிங்கினால் ஆனது
என்று சொல்வதை விட,
ஷாஜகான் பீலிங்கினால் ஆனது
என்று சொல்வது தான் சரியாக
இருக்கும்.

2. தேர்தல்

யாரோ பெரும்புள்ளி ஆவதற்கு
நம் கை வரல்களில் வைக்கப்படுகிறது.
கரும்புள்ளி.

3. உயர்வு

படித்தவன் படிப்பால் உயர்வான்.
படிக்காதவன் படிப்படியாக உயர்வான்.
உழைத்தால் உயர்வு நிச்சயம்.

4. தூக்கம்

தூக்கம் மிகவும் விசித்திரமானது
வரும்போது எல்லாவற்றையும்
மறக்க செய்கிறது.
இது வராத போது
எல்லாவற்றையும் நினைவுபடுத்துகிறது.

5. எமன்

கடவுளை விட எமனே சிறந்தவர் போல...
எமன் இறந்த பின்னர் தான்
சித்திரவதை செய்கிறார்.
ஆனால் கடவுள் வாழும் போதே
தினம் தினம் சித்தரவதை செய்கிறார்.

பள்ளிக்கூடம்

பி. ஆர். கிரிஜா
சென்னை





மழலையின்
சிரிப்பொலியில்
மனது நன்றாய்
குதூகலிக்க !
வெண் பஞ்சை
விரித்தாற் போல்
சீருடையில் சிறார்கள் !
காலை வேளை
இள வெயிலில்
கடவுள் வாழ்த்து
பாடிடவே !
ஆலய மணி போல
தினமும் வகுப்பு
மணி ஒலித்திடவே !

அன்பின் வடிவம்
ஆசிரியர் புன்னகை
அழகாய் பூத்திடவே !
அன்றைய தினம்
வகுப்பு வெகு சிறப்பாய்
நடந்திடவே !
பிள்ளைகளின்
துள்ளல் நடை
மைதானத்தில்
கேட்டிடவே !
விளையாட்டு ஆசிரியர்
விளையாடிக்
காட்டிடவே !
பிள்ளைகளின்
மகிழ்ச்சி என்றும்

Emergency Helpline No.	
100	Police
101	Fire
102	Ambulance
103	Traffic Police
108	Medical Helpline
131	Indian Railway Enquiry
139	Railway Enquiry
1031	Anti Corruption Helpline
1072	Train Accident
1090	Anti Terror Helpline
1910	Blood Bank Information
1947	Aadhar card-UIDAI
1071	Air Accident
1906	LPG Emergency Helpline
1919	Eye Donation Bank
1551	Kisan Call Center
1096	Natural Disaster Control
1098	Child Abuse Hotline

ஓர் முத்தத்தால் வென்றாள்!-

காதல் கவிதை



-கே. அசோகன்
சென்னை

கருவிழி அசைவினில்
கவிதைகள் பிறந்தன
கண்டபின் இமைகள்
மூடவே மறந்தன...

குறுநகையோ காவியம்
குமரியவள் ஓவியம்
நாசியில் மூக்குத்தி
நயம்பட பேசின...

தேசிய பறவையென
ஒயிலாகவே நடந்தாள்
தேகத்தில் படர்ந்தாள்
தீந்தமிழாய் இனித்தாள்...

ஜாடையில் கவர்ந்தாள்
ஜாதிமல்லியென மலர்ந்தாள்
ஓடையோரம் நின்றாள்
ஓர்முத்தத்தால் வென்றாளே!

அழகர் பிரிண்டர்
ALAGAR Printers & Studio
CELL : 9843018120
திருமண அழைப்பிதழ்
போட்டோ & வீடியோ
ஜிராக்ஸ்
ஆதார் கார்டு பிரிண்ட்
I.D கார்டு
கலர் ஜிராக்ஸ்
விசிட்டிங் கார்டு
விமான டிக்கெட்
URGENT DELIVERY DONE HERE
ஸ்டுடியோ ஜிராக்ஸ்

ஹைகூ....

ஏ. மூர்த்தி
திருவள்ளூர் மாவட்டம்
கைப்பேசி -9600886441.

விடியல்

இருளை உண்டு செரித்துக்
கொண்டே ஒய்யாரமாக
உதிக்குது சூரியன் .



அம்மா

பனியாக கரையும் பாசம்
நம் வாழ்வை அன்பெனும்
உளியால் செதுக்கும்

காதல்

உயிருக்குள் கொதிக்கும் உலை
முப்பொழுதும் உடலையும்
உணர்வையும்

பூக்கள்

எங்களிடம் போலியில்லை உங்களிடம்
என்று காணும் மனிதர்களைக்
கேள்வி கேக்குது .

மனம்

கல்லடிப்பட்ட காக்கையாய் பறக்க
முடியவில்லையடி என்னவளே உன்
கண்ணடிப்பட்ட என்னால்.



சிரிப்பு

இளைஞன் 1: எல்லா வேட்பாளர்களிடமிருந்தும் வோட்டுக்கு பணம் வாங்கிய பிறகும் உனது மாமா சோகமா இருக்கிறாரே! ஏன்?
இளைஞன் 2: நோட்டாவிடமிருந்து வாங்கலையாம்.

ஒருவர் : அந்த டாக்டரை போலின்னு எதை வைத்து சொல்கிறாய்?
அடுத்தவர் : தலை சுத்துது டாக்டர்ன்னு சொன்னதற்கு " அப்போ உட்கார்ந்த இடத்திலிருந்தே நாலாபக்கமும் என்ன நடக்குதுன்னு பார்க்கலாமே வெரிகுட்" ன்னு சொல்றார்.

ஒருவர் : மாநாடு பந்தலில் இருக்கிற பெண்களை அடுத்த பத்து நிமிடம் வரை காதை பொத்திக்கொள்ள சொல்றாங்களே! ஏன்?
அடுத்தவர் : நம்ம கட்சியின் " குடிகார அணிப்பிரிவு செயலாளர் " அடுத்து பேசப் போறாராம் .

நாஞ்சில் சு. நாகராஜன்
பறக்கை, கன்னியாகுமரி
செல். 9486387026

இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in



எப்படி படிப்பது என்ற குழப்பமா?

நீங்கள் TNPSC தேர்வுக்கு படிக்கிறீர்களா?

சிறந்த திட்டமிடல் கொண்ட புத்தகம்...

புத்தகம் 100.00
கூரியர் 50.00
மொத்தம் 150.00
G.Pay 7094053241

துணுக்கு

16. அக்கினிநட்சத்திரம் பதினாறுநாட்கள்.
17. ஐவகையால் நேருபிரதமர் ஆகப் பதினேழுஆண்டுகள் இருந்தார்.
18. ராஜநாகம் பதினெட்டடிநீளம் வரைவளரும்.
19.மாஸ்கோபாராளுமன்றக் கட்டிடம் பத்தொன்பதுமாடிகளைக் கொண்டது.
20. சீவகசிந்தாமணியில் இருபது இடங்களில் திருக்குறளடிகள் எடுத்தாளப்பட்டுள்ளன.
21. இந்து - இசுலாமியர் ஒற்றுமைக்காக இருபத்தோறுநாட்கள் காந்தியார் உண்ணாவிரதம் இருந்தார்.
22. உதடுகள் ஒட்டாமல் சொல்லக்கூடியகுறைட் பாக்கள் திருக்குறளில் இருபத்திரெண்டு.
23. நாய்பூனை,குருவிக்குவயது இருபத்து மூன்று.
24.தண்டியாத்திரைநடந்தநாட்கள் இருபத்துநான்கு.
25. நூறுவரையில் உள்ளபகாஎண்கள் இருபத்துஐந்து.
26. ஏழுமலையான் வைரக்கிரீடம் இருபதாரு கிலோதங்கத்தில் செய்யப் பட்டது.
27. குசேலனுக்கு இருபத்தேழுபிள்ளைகள்.
28. நேருபிறந்தபோதுமோதிலால் நேருவிற்குவயது இருபத்தெட்டு. இந்திராபிறந்தபோதுநேருவிற்குவயது இருபத்தெட்டு.
29. பட்டுக்கோட்டைகல்யாணசுந்தரம் இருபத்தொன்பதாம் வயதில் காலமானார்.
30. லட்சுமிகாந்தன் கொலைவழக்கில் முப்பதுமாதம் சிறை இருந்தார்கள் என்.எஸ். கிருஷ்ணனும்,தியாக ராஜபாகவதரும்.



தொகுப்பு
மு. ராதாகிருஷ்ணன்,
வாணியம்பாடி -635751

வீட்டில் வீண் செய்த நேரத்தை, ரோட்டில் சரிசெய்ய நினைக்காதீர். சாலை விபத்துகளை தவிர்ப்போம்.

கண்ணாடிப்பக்கம்

படைப்பாளி முகவரி

அமைப்பு ரதி



வேண்டும். வேண்டும்.

கவிஞர் இல.இரவி
செ.புதூர்.612203

ஒவ்வொரு நாளும் இன்று புதிதாய் பிறந்தோம்'என்ற மனநிலையில் இருக்க வேண்டும்.

இன்று ஒரு புதிய பாடத்தை மற்றவர் மூலம் கற்றுக்கொண்டோம்'என நினைக்க வேண்டும்.

இன்றைய தினம் மிக அற்புதமான தினம்'என
நினைக்க வேண்டும்..

இன்று யாரையும் மனதால்கூட வெறுக்கவில்லை'என
நினைக்க வேண்டும்.

இன்று நிறைய பேர்களின் மோசமான செயல்களை மன்னித்து விட்டேன்'என நினைக்க வேண்டும்...

இன்று மற்றவர்களை ஆண்டவன் எனக்கு அதிக மகிழ்ச்சியை அளித்தது உள்ளான்' என நினைக்க வேண்டும்.

இப்படி தினம்தினம் நினைத்தால் எந்நாளும் வாழ்வில் வசந்தம் வீசும்...

.....

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...

அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர் ஆசிரியர்
திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் - 29 சக்தி நகர்,
ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241

இன்று இதழை படித்ததற்கு நன்றி